# நடந்து முடிந்த வேலைநிறுத்தம்

டிசம்பர் 15 வேலைநிறுத்தம் மிகச் சிறப்பாக நடந்ததாக அனைத்து சங்க இணயதளங்கள் முலம் அறிகிறோம். அலுவலகத்திற்கு வராதவர்கள் கணக்கை மட்டும் நிர்வாகம் எடுத்திருந்தால் அதிர்ச்சி தரும் ரிபோர்ட் மட்டுமே அதற்கு கிடைத்திருக்கும். எந்த அலுவலும் அன்று நடைபெறவில்லை.

போராட்டத்தின் வெற்றி குறித்த மதிப்பீட்டில் ஒத்த நிலை எப்போதும் இருந்ததில்லை. கோரிக்கைகள் தீர்ந்தால் மட்டுமே வெற்றி என கருதுவர்கள் உண்டு. பரிசீலனை செய்வதாக ஏற்றுக் கொண்டாலே நிறைவான வெற்றி என அறிவிப்பவர்கள் உண்டு. போராட்டம் முடிந்தவுடன் நூறு சத வெற்றி என கொண்டாடுபவர்களும் உண்டு.

வேலைநிறுத்தத்தில் பங்கேற்றவர்களின் ஊதியம் பிடித்து தனது பழிவாங்கலை நிர்வாகம் தீர்த்துக்கொள்ளும். வேலை முடங்கியதால் 100 கோடி நட்டம் வந்தாலும் அதை ஏற்க தயார் ஆனால் 90 கோடி போனஸ் கொடுக்க தயாரில்லை. DPE வழிகாட்டுதல் இல்லை என்கிறது. 78.2 க்கு DPE வழிகாட்டுதல் இருந்தும் நிர்வாகம் அதை தள்ளிபோடுகிறது. சம்பள வெட்டு மூலம் 20 கோடி அதற்கு மிச்சமாகலாம்.

VRS மட்டுமில்லாமல் பரந்துபட்ட கோரிக்கைகள் இருந்ததால் பெருமளவு ஊழியர்கள் பங்கேற்பை பெறமுடிந்தது. போனஸ், மருத்துவப்படி, 78.2 போன்ற கோரிக்கைகளில் பெரும்பான்மை ஊழியர்கள் ஈர்க்கப்படுவது இயல்பான ஒன்றே. ITS பிரச்சனையில் அதிகாரிகள் தீவிரமாக அழுத்தம் தந்து போராட்டத்திற்கு வலு கூட்டினர். BSNL நிதி ஆதாரம், VRS போன்ற கொள்கை சார்ந்த பிரச்சனைகளில் தலைவர்களும், கேடர்களும் தங்களது உறுதி குலையாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

வேலைநிறுத்த நாள் அன்றே JAC தலைவர்கள் தரை அமர்வு தர்னா திடீர் போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏன்

ஏற்பட்டது என தெரியவில்லை. திட்டமிடப்பட்ட போராட்டமாக தெரியவில்லை. நிர்பந்தத்திற்குப் பின்னர் நடந்த CMD பேச்சுவார்த்தையில் புதிய உறுதிமொழிகள் ஏதாவது இருக்கிறதா என்பது அக்கூட்டம் குறித்த அதிகாரபூர்வ மினிட்ஸ் ஏதேனும் வந்தால்தான் தெரியும்.

வேலைநிறுத்தத்தில் பங்கேற்ற சங்கங்கள் தங்களது உறுப்பினர் பங்கேற்பை பரிசீலிப்பது தேவையாகிறது. மாநிலந்தோறும் போராட்ட பங்கேற்பு குறித்த தகவலை கார்ப்பரேட் அலுவலகம் மூலம் பெற வேண்டும். அடுத்து வரும் போராட்டங்களுக்கு இவ்வகை பரிசீலனை உதவிகரமாக இருக்கும்.

தமிழகத்தை பொறுத்தவரை வேலைநிறுத்தம் பொதுவாக அமைதியாகவே நடந்துள்ளது. சில இடங்களில் ITS-DOT ஊழியர் அலுவலக அனுமதி குறித்து போலீஸ் பிரச்சனை ஏற்பட்டது. 11000 ஊழியர்கள்-அதிகாரிகள் பங்கேற்பு பாராட்டுக்குரியது. ஊழியர் சங்கங்களுக்கு இணையான போராட்ட உணர்வை அதிகாரிகள் சங்கங்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

## அடுத்து என்ன?

ஒருநாள் போராட்டத்தை அடுத்து என்ன என்பதுதான் கேள்வி. காலவரையற்ற வேலைநிறுத்தம் என்ற NFTE முன்மொழிவை ஓரிரு சங்கங்களும் சொல்லத் துவங்கியுள்ளன. காலவரையற்ற வேலைநிறுத்தம் எனில் ஊழியர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கு மாபெரும் முயற்சிகள் செய்யப்படவேண்டும்.

ஊழியர்களுக்குள்ள அச்சம்-தயக்கம் பழிவாங்குதல்/ சம்பளவெட்டு என்பதுதான். VRS யை ஏன் எதிர்க்கிறீர்கள் என்பதை சில ஊழியர்கள் கேட்டு வருகின்றனர். பழிவாங்குதல் இல்லை-சம்பளவெட்டில்லை என தோழர் குப்தா பழக்கிவிட்டார் என சில இடங்களில் விமர்சனம் வருகிறது. 1968 வேலைநிறுத்த பழிவாங்குதல்களை கண்ட பின்னர் குப்தா பழிவாங்குதல் கூடாது என்பதை உடன்பாட்டின் முதல் அம்சமாக பெறுவதில் குறியாக

தொழிற்பட்டார்.அன்று DOT அதிகாரிகளும் அதை ஏற்றுக்கொண்டனர். பொதுத்துறைகளில் NO Work No Pay என்பது விதியாக அமுல்படுத்தப்படுகிறது என்பதில் ஊழியர்கள் Convince ஆக வேண்டிய தேவை வந்துள்ளது.

நட்டம் என்றால் PLI கிடையாது என்பதை DPE/DOT வழிகாட்டுதல்களை காரணம் காட்டி நிர்வாகம் நிராகரிக்கிறது. DOT தனது ஊழியர்களுக்கு ரூ3500 வழங்கியுள்ளது. நட்டம் என்றால் NFTE முன்வைத்த Non PLB/ Non PLI என்ற கோரிக்கையோ, அல்லது விழாப்படி என்ற கோரிக்கையோ அனைத்து சங்க பொது கோரிக்கையாக மாறவேண்டும். DOT மட்டத்திலும் இதை விவாதிக்கவேண்டும்.

DPE வழிகாட்டுதல் இருந்தும் 78.2 நிறைவேற்றப்படவில்லை. அதிகாரிகளுக்கு நிறைவேற்றும்போது ஊழியர்களுக்கும் தரப்படும் என ஊதிய உடன்பாட்டின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நிர்வாகம் மீண்டும் பரிசீலிப்பதாக கூறியுள்ளது. வருகிற ஜனவரி அல்லது நிதியாண்டு முதலாவது அமுலாவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். தொடர்ந்து இக்கோரிக்கை எம்மட்டத்தில் உள்ளது என்பதை கண்காணிக்கவேண்டும்.

மருத்துவப்படி வெட்டை சரி செய்திட ஆறு மாதம் காத்திருக்க சொல்கின்றனர். இடைக்காலமாக 8/10 நாட்கள் என்ற அளவிலாவது சரி செய்ய முடியுமா என்பதை தொடர்ந்து முயற்சிக்கவேண்டும்.

BWA திரும்ப ஒப்படைப்பு மூலம் நிதி என்பது இந்த நிதியாண்டிற்குள் வருமா என்பது தெரியவில்லை. மறுஏலம் நடத்தி பின்னர்தான் தரப்படும் என்பது போல் செய்திகள் வெளியாகிவருகின்றன. ஒப்படைப்பு என்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு முன்பணம் 5000 கோடியளவில் பெறமுடியுமா என்பதை முயற்சிக்கலாம்..

USOF (ADC க்குப் பதிலாக) ரூ 2000 கோடி ஜூலை 2011க்குப் பின்னரும் நீடிப்பது அவசியம் என்பது தொடர்ந்து வற்புறுத்தப்படவேண்டும்.

விதி 37A வில் திருத்தம் தேவைப்படுகிறது. DOTயிலிருந்து BSNLக்கு வந்தவர்கள் பென்ஷன் பதுகாப்பு குறித்து அவ்விதி உத்தரவாதம் தருகிறது. ஆனால் ஓய்வூதியம் திருத்தம் குறித்து அதில் சொல்லப்படவில்லை. மத்திய அரசு ஊதிய மாற்றம் எனில் ஓய்வூதியதரர்களுக்கும் ஓய்வூதியம் திருத்தம் செய்யப்படுகிறது. ஆனால் பொதுத்துறையில் IDA ஓய்வூதியதரர்களுக்கு திருத்தம் பெரும் முயற்சிகளுக்கு பின்னர்தான் இம்முறை சாத்தியமானது. இதற்கு உதவக்கூடிய மொழியில் விதி 37A வில் திருத்தம் தேவைப்படுகிறது. திருத்தம் அரசிதழ் அறிவிப்பாக வெளியிடப்பட்டால் ITS பிரச்சனை கூட நிரந்தர தீர்வை பெறும்.

VRS என்பதில் நாம் தோற்றுப்போகும் நிலை வந்தால் கூட கொள்கை சார்ந்த நிலைபாடுகளையே தொழிற்சங்கம் என்ற வகையில் எடுக்க இயலும். Pragmatic நிலைப்பாடுகளை கொள்கை சார்ந்த பிரச்சனையில் எடுக்க முடிவதில்லை.

அடுத்த போராட்டத்திற்கு முன்னர் DOT,DOP,MOF என அனைத்து மட்டத்திலும் நமது நியாயம் போதுமான அளவு உணர்த்தப்படவேண்டும்..பிரதம அமைச்சரை சந்தித்தும் நமது நிலையை எடுத்துரைக்கவேண்டும். அனைத்து முயற்சிகளும் தோல்வியை தழுவினால் தீவிர போராட்டங்களை நாம் கட்டமைக்கலாம்.